கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க செயற்குழு ஆலோசனைக் கூட்டம் விழுப்புரம் தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தலைமையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர், முன்னாள் அமைச்சர் முனைவர் க.பொன்முடி எம்.எல்.ஏ. கலந்துகொண்டு ஆலோசனைகளை வழங்கினார். நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ம.ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர்கள் டி.என்.முருகன், இரா.கற்பகம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் டி.செல்வராஜ், எம்.அப்துல் சலாம் மற்றும் ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், தேர்தல் பணிக்குழு ஒருங்கிணைப்பாளர்கள், மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அருப்புக்கோட்டை இஸ்லாமிய ஜமாத் சார்பாக நடைபெற்ற இப்தார் நோன்பில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் கலந்துகொண்டு நோன்பு கஞ்சி அருந்தினார். உடன் முன்னாள் சேர்மன் சுப்பாராஜ், நகர் மன்ற தலைவர் சிவபிரகாசம், தலைமைச் செயற்குழு உறுப்பினர் சாகுல் ஹமீது, நகரச் செயலாளர் ஏ கே மணி, விருதுநகர் தெற்கு மாவட்ட இளைஞரணி பாபுஜி, நெசவாளர் அணி பழனிசாமி, ஒன்றிய செயலாளர்கள் பால கணேசன், பொன்ராஜ் மற்றும் ஏராளமான இஸ்லாமிய சகோதரர்கள் கலந்து கொண்டனர்.

விழுப்புரம் வடக்கு மாவட்டம் செஞ்சி சட்டமன்றத் தொகுதி செஞ்சி கிருஷ்ணாபுரம் கொத்தமங்கலம் சாலையில் உள்ள ஈத்காமைதானத்தில் நடைபெற்ற ரம்ஜான் பண்டிகை சிறப்புத் தொழுகையில் விழுப்புரம் வடக்கு மாவட்ட பொறுப்பாளர் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. கலந்து கொண்டார். உடன் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி, செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான் உள்ளிட்ட இஸ்லாமிய பெருமக்கள் உள்ளனர்.

செஞ்சியில் ரம்ஜான் சிறப்பு தொழுகை நிகழ்ச்சி!

செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பங்கேற்பு!

செஞ்சி, மார்ச் 22- நபிகள் நாயகம் வழியில் ஆட்சியை நடத்தும் முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தாய் தந்தையை இழந்து வாடும் குழந்தைகளுக்கு அன்பு கரங்கள் திட்டத்தை அறிவித்து மாதம் 2000 ரூபாய் வழங்கிமுதல மைச்சர் தாய் தந்தையாக திகழ்ந்து வருவதாக செஞ்சி ஈத்கா மைதானத்தில் நடைபெற்ற ரம்ஜான் சிறப்பு தொழுகையில் முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. பெருமிதம் தெரிவித்தார்.

இஸ்லாமியர்களின் பண்டிகைகளில் ஒன்றான ரம்ஜான் பண்டிகை ஆண்டு தோறும்கொண்டாடப்படுவது வழக்கம்.அந்த வகையில் தமிழகத்தில் நேற்று ரம்ஜான் பண்டிகை சிறப்பாக கொண் டாப்பட்டது. விழுப்புரம் மாவட்டம் செஞ்சிக் கோட்டையில் உள்ள சாதுல்லாகான் மசூதியில் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு முஸ்லீம்கள் நேற்று காலையில் சிறப்பு தொழுகை நடத்தினர். இதை முன்னிட்டு செஞ்சி வட்ட ஜமாத் தலைவர் சையத் மஜித் பாபு தலைமையில் செஞ்சி பெரிய பள்ளிவாசலில் இருந்து முஸ்லீம்கள் ஊர்வலமாக செஞ்சி கூட்ரோடு, திருவண்ணாமலை சாலை வழியாக செஞ்சிக் கோட்டையில் உள்ள சாதுல்லாகான் மசூதியை அடைந்தனர். அங்கு காலை 9.30 மணிக்கு சிறப்பு தொழுகை நடந்தது. தொழுகையை ஷமீம் அக்தர் நடத்தினார் .இதில் ரப்பானி வைத்திய சாலா டாக்டர் எஸ் .ஏ . சையத் சர்தார். பள்ளிவாசல் தலைவர்கள் திருவண்ணாமலை சாலை அப்துல் ஜப்பார், பஸ் நிலையம் ஆதில் பாஷா, என்.ஆர். பேட்டை அப்துல்லா,,எம். ஜி.ஆர்.நகர் பாபு சாயபு. கவுன்சிலர் ஜான் பாஷா, மாவட்ட பிரதிநிதி சர்தார், முன்னால் கவுன்சிலர்கள் காஜா பாஷா,ரப்பானி அசுதுல்லா.சையத் ஆதம் . ஷிமார்ட் அஷ்ரப், கலீல்,சமியுல்லா, முபாரக். ஷாஜகான். ஷாஜிஷரிப் ,சாதிக், குத்தூஸ் உள்ளிட்ட ஏராமான இஸ்லாமிய பெருமக்கள் சிறப்பு தொழுகையில் கலந்து கொண்டனர்.

இதேபோல் செஞ்சி செட்டிபாளையம் கொத்தமங்களம் சாலையில் உள்ள ஈத்கா மைதானத்தில் ரம்ஜான் பண்டிகையை முன்னிட்டு காலை 9.30 மணிக்கு சிறப்பு தொழுகை நடந்தது. இதில் விழுப்புரம் வடக்கு மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர்செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ., முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் மாசிலாமணி. செஞ்சி பேரூராட்சி மன்ற தலைவர் மொக்தியார் அலி மஸ்தான்,உள்ளிட்ட ஏராளமான முஸ்லிம்கள் கலந்து கொண்டனர்.பள்ளிவாசல் தலைவர்கள் சந்தைமேடு பட்டேல் கவுஸ் பாஷா,தேசூர்பாட்டைஇப்ராஹிம் சிராஜ், சிறுகடம்பூர் மதினா பள்ளிவாசல் தலைவர் சையத் அமீன், முன்னால் நகர செயலாளர் காஜா நஜீர், உள்ளிட்ட ஏராளமான முஸ்லீம்கள் கலந்து கொண்டனர்.

சிறப்புத் தொழுகையில் கலந்து கொண்ட முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. செய்தியாளர்களிடம் கூறுகையில்:

தாய்,தந்தையை இழந்த குழந்தைகளைநபிகள் நாயகம் அவர்கள் அரவணைத்துள்ளார் நபிகள் நாயகம் வழியில் ஆட்சியை நடத்தும் தமிழ்நாடு முதல மைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தாய் தந்தையை இழந்து வாடும் குழந்தைகளுக்கு அன்பு கரங்கள் திட்டத்தை அறிவித்து மாதம் 2000 ரூபாய் வழங்கிய ஒரு தாய் தந்தையாக திகழ்ந்து வருவதாக பெருமிதம் தெரிவித்த அவர்இந்த புனித ரம்ஜான் திருநாளில் ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும் என்ற வகையில் முதலமைச்சருக்கு தனது மனமார்ந்த நன்றியும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டார்.

இதே போல் அவலூர் பேட்டை, எதப்பட்டு, வளத்தி ,கடலி, சொரத்தூர், மீனம்பூர், அப்பம்பட்டு, அனந்தபுரம் ஆகிய பகுதிகளில் நடந்த ரம்ஜான் பண்டிகை சிறப்பு தொழுகையில் ஏராளமான முஸ்லீம்கள் குழந்தைகள் கலந்து கொண்டு ஒருவருக்கு ஒருவர் கட்டித் தழுவி ரம்ஜான் வாழ்த்து தெரிவித்துக் கொண்டனர்.

கடலூர் மேற்கு மாவட்டம்,பண்ருட்டி நகர தி.மு.க. சார்பில் நகர கழக செயற்குழு கூட்டம் , தட்டாஞ்சாவடி நகர கழக அலுவலகத்தில், க .இராஜேந்திரன் தலைமையில், டாக்டர் கொ.நந்தகோபாலகிருஷ்ணன் முன்னிலையில் நடைபெற்றது நடைபெற உள்ள சட்ட மன்ற தேர்தலில் கழக நிர்வாகிகள் செய்ய வேண்டிய பணிகள் குறித்து பல்வேறு ஆலோசனைகள் வழங்கப்பட்டன. இந்நிகழ்ச்சியில் தணிகை செல்வம், ஆனந்தி சரவணன், ராஜா, ராமலிங்கம், கௌரி அன்பழகன்,சீனிவாசன், சசிகுமார், பிரபு, பரணி சந்தர், அமைப்பாளர் ராம்குமார், சம்பத், பார்த்திபன் மற்றும் நகர மன்ற உறுப்பினர்கள், வார்டு கழக செயலாளர்கள், இளைஞர் அணி நிர்வாகிகள் , சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

சர்வதேச அளவில் திரைப்படங்களை காட்சிப்படுத்த

திரைப்படத் தயாரிப்புகளை ஊக்குவிக்க எடுத்த நடவடிக்கை என்ன?

மக்களவையில் டி.எம்.கதிர்ஆனந்த் கேள்வி!

புதுடெல்லி, மார்ச் 22- இந்தியாவில் திரைப்பட விழாக்கள் இந்திய திரைப்படங்களை சர்வதேச அளவில் காட்சிப்படுத்துவதற்கவும் சர்வதேச திரைப்பட தயாரிப்புகளை ஊக்குவிக்கவும் ஒன்றிய அரசு எடுத்த சீரிய நடவடிக்கைகள் குறித்து மக்களவையில் வேலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர் ஆனந்த் கேள்வி எழுப்பினார்.

நம் நாட்டில் 'திரைப்பட விழாக்கள் மூலம் ஏற்றுமதி ஊக்குவிப்பு' என்ற திட்டத்தின் கீழ் ஒன்றிய அரசு நிதி ஒதுக்கீடு ஏதும் செய்திருக்கிறதா? அப்படியானால், அதன் விவரங்கள் தருக? நமது இந்திய நாட்டில் வெளிநாட்டுத் திரைப்படத் தயாரிப்புக்கான ஊக்கத் தொகையை 40 சதவீதமாக, அதிகபட்ச ஊக்கத் தொகை ரூ.30 கோடியாக உயர்த்தியுள்ளதா? அப்படியானால், அதன் விவரம்; மற்றும்

டெல்லியில் இந்திய சர்வதேச திரைப்பட விழா (IFFI) மற்றும் சர்வதேச திரைப்பட விழாவை நடத்துவதற்கு. ஒன்றிய அரசாங்கம் நிதி வழங்கியுள்ளதா? அப்படியானால், அதன் விவரங்கள் என்ன? என மக்களவையில் டி.எம். கதிர்ஆன்ந்த் கேள்வி எழுப்பினார்.

இரயில்வே, தகவல் மற்றும் ஒளிபரப்பு மற்றும் மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்பத்துறை அமைச்சர் அஷ்வினி வைஷ்ணவ் எழுத்து பூர்வமாக அளித்த பதில் விவரம் கீழ்வருமாறு:

லோக் சபா நட்சத்திர மிட்ட கேள்வி எண்.366 பதிலில் குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கை,

"திரைப்பட விழாக்கள் மூலம் ஏற்றுமதி ஊக்குவிப்பு" என்ற நேரடித் திட்டம் எதுவும் ஒன்றிய அரசின் நடைமுறையில் இல்லை. இருப்பினும், ஒன்றிய அரசாங்கம் இந்திய சினிமாவை ஊக்குவிக்கிறது மற்றும் திரைப்பட உள்ளடக்கத்தின் (DCDFC) திட்டத்தின் மேம்பாடு, தொடர்பு மற்றும் பரப்புதல் மூலம் சர்வதேச ஒத்துழைப்புகளை எளிதாக்குகிறது.

மேலும், DCDFC திட்டத்தின் கீழ் முக்கிய சர்வதேச திரைப்பட விழாக்களில் பங்கேற்பதற்கும், இந்தியாவில் திரைப்பட விழாக்களை நடத்துவதற்கும், தேசிய திரைப்பட பாரம்பரிய இயக்கம் (NFHM) மற்றும் திரைப்படம் தொடர்பான விளம்பர நடவடிக்கைகள் மற்றும் சர்வதேச அளவில் இந்திய சினிமாவைக் காட்சிப்படுத்துவதற்கு இந்தியத் தூதரகங்கள் மூலம் இந்திய சினிமாவை மேம்படுத்து வதற்கும் நிதியுதவி வழங்கப்படுகிறது.

நவம்பர் 20, 2023 அன்று கோவாவில் நடைபெற்ற 54வது இந்திய சர்வதேச திரைப்பட விழாவில் (IFFI) அரசாங்கம் இந்தத் திட்டத்தில் ஒரு பெரிய திருத்தத்தை அறிவித்தது மற்றும் இந்தியாவில் சர்வதேச தயாரிப்பாளர்களின் திரைப்படத் தயாரிப்பை ஊக்குவிப்பதற்காக ஊக்கத்தொகையை 40 சதவீதமாக உயர்த்தியது. திருத்தப்பட்ட ஊக்கத்தொகைகளில் பின்வருவன அடங்கும்:

1. 30% அடிப்படைத் திருப்பிச் செலுத்துதல், 2. குறைந்தபட்சம் 15% இந்திய மனிதவளத்தைப் பயன்படுத்துவதற்கு 5% போனஸ் மற்றும் 3. குறிப்பிடத்தக்க இந்திய உள்ளடக்கத்திற்கு (SIC) 5% போனஸ்.

மேலும், ஒரு திட்டத்திற்கான அதிகபட்ச ஊக்கத்தொகை ஒரு திட்டத்திற்கு, 2.5 கோடியிலிருந்து 30 கோடியாக உயர்த்தப்பட்டது.

சர்வதேச அளவில் இந்தியத் திரைப்படத் தொழிலை ஊக்குவிக்கவும் ஒருங்கிணைக்கவும், கோவா மாநில அரசாங்கத்துடன் இணைந்து ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 20 முதல் 28 வரை இந்தியத் திரைப்பட விழாவை (IFFI) ஒன்றிய அரசு நடத்துகிறது. IFFI இன் 56வது பதிப்பு, 2025க்கு, ஒன்றிய அரசு ரூ. 39.43 கோடி திரைப்பட உள்ளடக்கத் திட்டத் தின் (DCDFC) மேம்பாடு, தொடர்பு மற்றும் பரப்புதல் ஆகியவற்றின் கீழ். வழங்கியது.

மேலும், டெல்லியில் நடந்த சர்வதேச திரைப்பட விழாவிற்கு நிதி வழங்கப்படவில்லை.

இவ்வாறு அமைச்சர் தனது பதிலில் கூறினார்.

தேனி தெற்கு மாவட்ட சின்னமனூர் தனியார் மண்டபத்தில்மாநில பொதுக்குழு உறுப்பினர் தக்காளி அக்கீம் ஏற்பாட்டில் புனித ரமலான் சமூகநல்லிணக்க இஃத்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி தேனி தெற்கு மாவட்ட செயலாளரும் சட்டமன்ற உறுப்பினருமான கம்பம் ராமகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. இதில் 50க்கும் மேற்பட்டோருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது. நிகழ்ச்சியில் வேப்பம்பட்டி செந்தில், மனேகரன், முத்துக்குமார், அய்யம்மாள், நரம்புற்ற கவுன்சிலர் அமீன் மற்றும் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணிக் கட்சியினர், நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

சொ. காவேரிமணியம்

மார்ச் 22 (2006)

மதுரை மாவட்டக் கழகச் செயலாளராகவும், மாநகரச் செயலாளராகவும் சிறப்பாகப் பணியாற்றியவர்.

தலைமைக் கழகத் தீர்மானக்குழுத் தலைவராகவும், உயர்நிலை செயல் திட்டக் குழு உறுப்பினராகவும், மதுரை வடக்கு மாவட்ட தொழிற்சங்கத் தலைவராகவும் திறம்படப் பணியாற்றியவர்.

1971ல் திருப்பரங்குன்றம் தொகுதி சட்டமன்ற உறுப்பினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு மக்கள் பணியாற்றி நற்பெயர் பெற்றவர்.

"எந்த நிலையிலும் கொள்கை உறுதியில் ஒரு சிறிதும் குலையாமல்; அழுத்தம் திருத்தமாக அரசியல் செயல்பாடுகளை அஞ்சா நெஞ்சுடன் ஆற்றிவந்த அரிமா அவர். எளிமையான வாழ்க்கை. எஃகு உள்ளம் – என்றைக்கும் எங்களோடு ஒருவராக இருந்து இயக்கம் வளர்த்த இனிய உடன்பிறப்பு" எனத் தலைவர் கலைஞர் அவர்கள் தனது இரங்கலில் தெரிவித்துள்ளார்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1996ஆம் ஆண்டு நடைபெற்ற முப்பெரும் விழாவில் இவருக்கு 'அண்ணா விருது' வழங்கிச் சிறப்பித்தார்கள்.

தலைமைக் கழகம்
தி.மு.க.

திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

காட்டாங்கொளத்தூர் எம்.வி.இராமு

மார்ச் 22 (2017)

காஞ்சிபுரம் மாவட்டம், காட்டாங்கொளத்தூர் ஒன்றியச் செயலாளராகவும், தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் தணிக்கைக்குழு உறுப்பினராகவும் பொறுப்பு வகித்து கழகப் பணியாற்றியவர்.

காட்டாங்கொளத்தூர் ஒன்றியக்குழுத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்துப் போராட்டங்களிலும் கலந்து கொண்டதோடு, நெருக்கடிகால மிசா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டு சிறையில் இருந்தவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.